# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 13 வெள்ளிக்கிழமை 27.06.2025 கதிர் 237







# வவுனியா வடக்கு பிரதேச சபை தமிழரசு வசம்!



## தவிசாளராக திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி தெரிவு

வவுனியா, ஜூன் 27

வவுனியா வடக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில், சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இன்று மாலை நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் ஒருவரைப் பிரேரேரிக்குமாறு கோரப்பட்ட

7➤

# யாழ். மாநகர சபையில் இன்று பெரும் அமளி!

## மேயரை வெளியேற விடாது தடுத்த உறுப்பினர்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 27

நியதிக்குழுக்களை நியமிப்பதில் உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்தின்மையால் யாழ்ப்பாணம் மாநகர சபையின் விசேட அமர்வின் போது குழப்ப நிலை ஏற்பட்டது.

யாழ். மாநகர சபையின் முதலாவது அமர்வின் தொடர்ச்சியாக இன்று விசேட அமர்வுக்காக கடந்த 23 ஆம் திகதியன்று திகதியிடப்பட்டிருந்தது.

அதனடிடையில் இன்று காலை மேயர் மதிவதனி தலைமையில் சபையின் விசேட அமர்வு ஆரம்பமானது.

7➤

## ஸ்ரீலங்கா விமான சேவை நிறுவனத்தின் முன்னாள் தலைவர் அதிரடியாகக் கைது!



கொழும்பு, ஜூன் 27

ஸ்ரீலங்கா விமான சேவை நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க, இலஞ்ச, ஊழல் விசாரணைக் குழுவினரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

7➤

### இ.போ.சவுடனான முரண்பாட்டையடுத்து

## வடக்கில் வரும் செவ்வாய்க்கிழமை தனியார் பஸ்கள் சேவை முடக்கம்!



யாழ்ப்பாணம், ஜூன் 27

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் அத்துமீறிய செயற்பாடுகளைக் கண்டித்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாணம் தழுவிய

7➤

# வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையும் தமிழரசு வசம்!





## தவிசாளராகப் பாலகிருஸ்ணன் பாலேந்திரன் தெரிவு

வவுனியா, ஜூன் 27

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் பாலகிருஸ்ணன் பாலேந்திரன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதேநேரம் சங்கு கூட்டணியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கோணேஸ்வரி உப தவிசாளராகப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவநந்தினி பாபு தலைமையில், சபையின் ஒன்றுகூடல்

7➤

# இலங்கையர்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன் 27

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் இலங்கையர்களுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தமது குழந்தைகளுக்கு அமெரிக்க குடியுரிமை பெறும் நோக்கத்துடன் குழந்தை பிரசவிக்கும் காலங்களில் சுற்றுலா விசாக்களில் அமெரிக்காவுக்கு பயணம் செய்பவர்களுக்கு எதிர்காலத்தில் விசாக்கள் மறுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நோக்கத்துக்காக அமெரிக்கா செல்லும் பயணிகள் பெரும்பாலும் அமெரிக்க அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் மருத்துவ உதவியை நம்பியிருப்பதாகவும், இது அமெரிக்க வரி செலுத்துவோர் மீது நிதிச் சுமையை சுமத்துவதாகவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

எனவே, அமெரிக்கா செல்லும் விண்ணப்பதாரர் ஒருவரின் முதன்மை நோக்கம் குடியுரிமை சலுகைகளுக்காக பிரசவம் என்று நம்பினால், சுற்றுலா விசாக்களை நிராகரிக்குமாறு தூதரக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது. (ஐ)

# காரில் எரிந்த நிலையில் ஒருவர் சடலமாக மீட்பு!

## ஹோட்டல் உரிமையாளர் என அடையாளம்

கொழும்பு, ஜூன் 27

மஹவ - தியபெடே பகுதியில் உள்ள காட்டில் காருக்குள் எரிந்த நிலையில் நபர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் முன்னெடுத்திருந்த முதற்கட்ட விசாரணையில், உயிரிழந்தவர் குருநாகல், மில்லேவ பகுதியைச் சேர்ந்த 49 வயதான ஹோட்டல் உரிமையாளர் எனத் தெரியவந்துள்ளது.

மேற்படி நபர் கடந்த 25ஆம் திகதி தலைமுடி வெட்டுவதற்காக வீட்டை விட்டுச் சென்றிருந்தார் எனவும், எனினும், அவர் வீடு திரும்பாத நிலையில் அவரின் மனைவி தொரடியாவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் எனவும் கூறப்படுகின்றது.

பொலிஸார் விசாரணைக்காக அவரது மனைவியை அழைத்து விசாரித்தபோது, கண்டு பிடிக்கப்பட்ட சடலம் அவரது கணவருடையது என அடையாளம் காணப்பட்டது.

இதனையடுத்து, குருநாகல் பொது வைத்தியசாலையில் இன்று பிரேத பரிசோதனை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து மஹவ தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பு கடலில் மூழ்கி மாயமான பல்கலை மாணவன் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூன் 27

கொழும்புத் துறைமுக நகர செயற்கை கடற்கரைப் பகுதியில் கடல் உயிரனங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி காணாமல்போன பல்கலைக்கழக மாணவனின் சடலம் இன்று வெள்ளிக்கிழமை கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டது.

கொழும்பு துறைமுக நகர செயற்கை கடற்கரை பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை சக பல்கலைக்கழக மாணவர்களுடன் கடல் உயிரினங்களைப் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்த மாணவன் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடலினுள் நீந்திக் கொண்டிருந்த நிலையில் காணாமல்போன மாணவன் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து சுழியோடிகளின் உதவியுடன் மீட்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், இன்று பிற்பகல் மாணவனின் சடலம் கொழும்பு துறைமுக நகர கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

24 வயதுடைய அஸ்கிரிய கம்பஹா பகுதியைச் சேர்ந்த கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்று வந்த மாணவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் குழுவொன்று பொழுதுப் போக்குக்காக ஸ்னோர்கெல் என்னும் நீரினுள் சுவாசிக்க உதவும் கருவியை அணிந்து கடலின் உற்பகுதியை பார்வையிட்ட போதே, குறித்த மாணவன் காணாமல்போயுள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மேலும் அம் மாணவன் அணிந்திருந்த ஸ்னோர்கெல் கருவி உயிர் பாதுகாப்பு அதிகாரிகளால் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், கொழும்பு துறைமுகப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# யாழில் 35 வருடங்களின் பின் அம்மனை வழிபட இராணுவத்தினர் அனுமதி மக்கள் மகிழ்ச்சி




35 வருடங்களின் பின் யாழ்ப்பாணம் பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு சுதந்திரமாக சென்று வழிபடுவதற்கு இன்று (27) முதல் இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ஆம் திகதி பலாலியில் இருந்து மக்கள் வெளியேறி இருந்தனர். அதனை தொடர்ந்து அப்பகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக காணப்பட்டது.

கடந்த 35 வருட காலமாக உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள ஆலயத்திற்கு (தற்போதும் ஆலயத்திற்கு மட்டும் செல்லவே அனுமதி) கடந்த 06 மாத காலத்திற்கு முதலே சுதந்திரமாக சென்று வழிபட அனுமதி வழங்கப்படும் என இராணுவத்தினர் அறிவித்து இருந்தனர்.

எனினும் , இதுவரை காலமும் கடுமையான கட்டுப்பாடுகளுடன் , விசேட தினங்களில் மாத்திரம் ஆலயத்திற்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.


இந்நிலையில், ஆலயத்திற்கு மாத்திரம் செல்வதற்கு என உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பிரத்தியோக பாதை அமைக்கப்பட்டு , குறித்த பாதை ஊடாக இன்றைய தினம் வெள்ளிக்கிழமை முதல் மக்கள் ஆலயத்திற்கு மாத்திரம் சென்று வழிபாட்டு திரும்ப இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்

அதேவேளை யாழ்ப்பாண மாவட்ட கட்டளை தளபதியாக புதிதாக பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் ராசிக குமார , வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனை நேற்றைய தினம் சந்தித்தார்.

இதன் போது, விவசாயத் தேவைக்காக விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளுக்கு அண்மையாக அமைந்துள்ள இராணுவ வேலியை பின்நகர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆளுநர் கோரி விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ள கொள்கலன் தாங்கி ஊர்தி நெரிசல்



கொழும்பு துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள, கொள்கலன் தாங்கி ஊர்தி நெரிசல் எதிர்வரும் நாட்களில் முடிவுக்கொண்டு வரப்படும் என சுங்க ஊடகப் பேச்சாளர், மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இந்திலையில், கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட இது குறித்து விளக்கமளித்திருந்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட உப்பு கொள்கலன்களை குறுகிய காலத்திற்குள் விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அதற்கமைய, அடுத்த சில நாட்களில் இந்த நெரிசல் முடிவுக்கு வரும் எனவும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார். (ஐ)

## கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்!

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்பு மற்றும் விரிவாக்கப்பட்ட பாடநெறி பிரிவின் கல்வி நடவடிக்கைகள் கடந்த 24ஆம் திகதி முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமீபத்தில் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பாடநெறி ஆய்வுத் துறையில் நிதி முறைகேடுகள் இடம்பெற்றதாக பொது நிறுவனங்கள் குழு (COPE) வெளிப்படுத்தியிருந்தது.

அதன்படி பல்கலைக்கழக நிர்வாகம் COPE குழுவின் முன் ஆஜர்படுத்தப்பட்டபோது இந்த முறைகேடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் பதில் தணிக்கையாளர் ஜெனரல் ஜி.எச்.டி. தர்மபால, வெளிவாரி பாடநெறி ஆய்வுத் துறையில் நடந்த நிதி முறைகேடுகள் காரணமாக மாணவர்கள் அனைத்துச் செலவுகளையும் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இது குறித்து கருத்து தெரிவித்த பல்கலைக்கழக விரிவுரையாளரான வண. தம்பர அமில தேரர், தற்போதைய பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்து கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க எதிர்ப்பார்த்துள்ளதாக தெரிவித்தார்.

## கொழும்பில் பசுமை சித்தர்



தமிழகத்தின் பசுமை சித்தர் இலங்கை வந்துள்ளார். முருகப் பெருமான் திருவருளுக்கு பாத்திரமான பசுமை சித்தர், கதிர்காம மகோற்சவத்தில் கலந்து கொண்டு அடியார்களுக்கு அருள் ஆசி வழங்கவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை சித்தரின் பக்தரான பிரதீப் செய்துள்ளார். கொழும்பில் உள்ள ஆலயங்களுக்கும் விஜயம் செய்து பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்வார்.

மயூராபதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில் ஜுலை மாதம் 6ஆம் திகதி நடைபெறும் தமிழ் பண்பாடு அனைத்துலக மாநாட்டில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார்.

கலை ஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளை சார்பில் எச் எச். விக்ரமசிங்க பதிப்பித்து பேராசான் மு. நித்தியானந்தன் அணிந்துரையுடன் வெளிவந்த மாத்தளை எஸ். மரதன் கிருஷ்ணன் எழுதிய 'இன்னுமொரு குறிஞ்சிப்பூ" நூலையும் வெளியிட்டு வைக்கின்றார். இந்த நிகழ்வில் தமிழகத்திலிருந்து 40 பேராளர்களும் லண்டன், சுவிஸ், பிரான்ஸ், மற்றும் தென் ஆப்பிரிக்கா போன்ற சர்வதேச நாடுகளில் இருந்தும் பேராளர்கள் கலந்து கொள்கின்றார்கள் மயூராபதி ஆலய அறங்காவலர் பி சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ)

## திருகோணமலையில் கவனயீர்ப்பு போராட்டம்



திருகோணமலை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் சங்கம் இணைந்து மாவட்ட செயலகத்தினால் நடைபெறும் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து .

தமக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது கூறி நியாயமற்ற இடமாற்றத்துக்கு எதிராக திருகோணமலை மாவட்ட செயலகத்தின் முன்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்னால் வெள்ளிக்கிழமை (27) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி உறுதி: பா.ஜ., அதில் அங்கம் வகிக்கும்: அமித்ஷா

"தமிழகத்தில் தே.ஜ., கூட்டணி ஆட்சி அமைவது உறுதி. அந்த ஆட்சியில் பா.ஜ., அங்கம் வகிக்கும்," என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, 'தினமலர்' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறினார். அவரது முழுமையான பேட்டி:

என்னை பொறுத்தவரை, மோடி அரசின் மிகப்பெரிய சாதனை என்பது, முன் எப்போதும் இல்லாத வகையில் இந்தியாவின் வளர்ச்சியை உறுதிப்படுத்தி இருப்பதுதான். கடந்த 2014ல் ஆட்சிக்கு வந்தபோது, நிர்வாகம் சீரழிந்து கிடந்தது. உள்நாட்டு பாதுகாப்பு நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. வங்கிகளும் மோசமான நிலையில் இருந்தன. மொத்தத்தில், பலவீனமான ஐந்து நாடுகளில் ஒன்றாக இந்தியா இருந்தது. தற்போது, அந்த காட்சி முழுமையாக மாறிவிட்டது. இப்போது, உலகின் வலுவான, மிகப்பெரிய பொருளாதாரம் உள்ள நான்கு நாடுகளில் இந்தியாவும் ஒன்று. வங்கிகள் லாபத்தில் இயங்குகின்றன. வாராக்கடன் அளவு இரட்டை இலக்கத்தில் இருந்து, 2.3 சதவீதமாக குறைந்துள்ளது.

வறுமைக்கோட்டுக்கு கீழ் இருந்த 26 கோடி பேர், அதில் இருந்து மீண்டிருக்கின்றனர். 80 கோடி மக்களுக்கு இலவச எரிவாயு, 5 லட்சம் ரூபாய்க்கான இலவச சுகாதார காப்பீடு, 5 கிலோ இலவச கோதுமை அல்லது அரிசி, மின்சாரம், குடிநீர் என மத்திய அரசின் நலத் திட்டங்கள் சென்றடைகின்றன. ஏழை மக்களுக்கு 70 ஆண்டுகளாக கிடைக்காத வரலாற்று சிறப்புமிக்க வளர்ச்சியை, 11 ஆண்டுகளில் மோடி சாத்தியப்படுத்தி இருக்கிறார். மொத்த உள்நாட்டு உற்பத்தி வெறும் எண்கள் மட்டுமே, உண்மையான பொருளாதார வளர்ச்சியை பிரதிபலிக்கவில்லை என எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றனவே?

மொத்த உள்நாட்டு உற்பத்தி 2 லட்சம் கோடி டாலரில் இருந்து 4.20 லட்சம் கோடி டாலராக இரட்டிப்பானதைக்கூட பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். ஆனால், மூலதனச் செலவு 1.90 லட்சம் கோடி ரூபாயில் இருந்து 10.50 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது எப்படி? இது வளர்ச்சிக்கான ஒரு மைல் கல் இல்லையா? தனி நபர் வருமானம் 68,572 ரூபாயில் இருந்து இரண்டு மடங்கு உயர்ந்து 1,33,488 ரூபாயாக அதிகரித்து இருக்கிறது. குற்றஞ்சாட்டுவோர், இது குறித்து என்ன சொல்லப் போகின்றனர்?

அன்னிய நேரடி முதலீடு 143 சதவீதம் உயர்ந்திருக்கிறது. சராசரி பண வீக்கம் 10.10 சதவீதத்தில் இருந்து 4.60 சதவீதமாக குறைந்து இருக்கிறது. அது அவ்வளவு எளிதில் குறைந்துவிடுமா? அன்னிய செலாவணி கையிருப்பு இரண்டு மடங்கு அதிகரித்து, 65,400 கோடி டாலராக உயர்ந்திருக்கிறதே? சர்வதேச அளவிலான டிஜிட்டல் பரிவர்த்தனையில், இந்தியாவின் பங்கு 50 சதவீதத்துக்கும் அதிகம். 44 லட்சம் கோடி ரூபாய்க்கு நேரடி பணப்பரிமாற்றம் நடந்திருக்கிறது. இதையெல்லாம் சாதனை என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது?

தமிழகத்தில் எங்கள் அரசு அமைந்ததும், சட்ட விரோத குடியேறிகள் இல்லாத மாநிலமாக நிச்சயம் மாற்றுவோம்.

மோடி அரசின் லட்சியமாக, 'சுய சார்பு இந்தியா' திட்டம் இருக்கிறது. தற்போதைய உலகளாவிய சூழலில், அது வெற்றி பெற்றதாக சொல்ல முடியுமா?

பாதுகாப்பு துறையில் 1.30 லட்சம் கோடி மதிப்பிலான பொருட்களை உற்பத்தி செய்து, அதில் 21,000 கோடி ரூபாய் மதிப்பிலான தளவாடங்களை ஏற்றுமதி செய்திருக்கிறோம். இதை, 2029க்குள் 50,000 கோடி ரூபாயாக உயர்த்துவதே இலக்கு. உள்நாட்டு மொபைல் உற்பத்தி, 26 சதவீதத்தில் இருந்து 99 சதவீதத்தை கடந்துள்ளது. 2014ல், 20 சதவீதம் பொம்மைகள் மட்டுமே இந்தியாவில் தயாராகின. இப்போது, அப்படி இல்லை.

மத்திய அரசின், 'கிழக்கு நோக்கிய கொள்கை' எந்த அளவுக்கு வெற்றி அடைந்துள்ளது? கடந்த 11 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்கள் எந்த அளவுக்கு பயனடைந்துள்ளன?

மோடி அரசு, வடகிழக்கு மாநிலங்களுக்கு எப்போதுமே முன்னுரிமை அளிக்கிறது. அனைத்து வடகிழக்கு மாநில தலைநகரங்களும், 2027க்குள் ரயில், விமானம், சாலை வழியாக, இந்தியாவின் பிற பகுதிகளுடன் இணைக்கப்படும். கடந்த 11 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்கள் பெரும் மாற்றத்தை அடைந்துள்ளன. அரசின் விடாமுயற்சியால், போடோ, உல்பா உள்ளிட்ட பல்வேறு ஆயுதக் குழுக்களுடன் 12 அமைதி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

திரிபுராவில் புரு குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்காக, நிலம் வழங்கப்பட்டு, 7,000 குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றன. கடந்த 11 ஆண்டுகளில் வடகிழக்கு மாநிலங்கள் பெற்ற நன்மைகள், முந்தைய எந்தவொரு ஆட்சிகளுடனும் ஒப்பிட முடியாது. லோக்சபா தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட உள்ளன. அதை எதிர்த்து, தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர். தமிழகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இந்த திட்டத்தை ஏன் செயல்படுத்துகிறீர்கள்?

முதலில், உண்மை என்ன என்பதை புரிந்து கொள்ள வேண்டும். லோக்சபா தொகுதி மறுவரையறை தொடர்பாக, ஏதேனும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறதா? அல்லது லோக்சபா தொகுதி எல்லை நிர்ணய முறை என ஏதேனும் முடிவு செய்யப்பட்டு உள்ளதா? இப்போது, இந்த பிரச்னையை தி.மு.க., ஏன் எழுப்புகிறது என்றால், கட்சித் தலைவர் மகன் உதயநிதியை முன்னிலைப்படுத்துவதால் எழுந்த உட்கட்சி பூசல்கள், தி.மு.க.,வினரின் ஊழல், மோசமடைந்த சட்டம் - ஒழுங்கு போன்றவற்றில் இருந்து தமிழக மக்களின் கவனத்தை திசை திருப்பத்தான், இப்படியெல்லாம் இல்லாத விஷயங்களை சொல்லி, அதை பூதாகரப்படுத்துகின்றனர்.



உண்மையிலேயே தொகுதி வரையறையை செயல்படுத்தும்போது, தமிழகத்துக்கு எந்த அநீதியும் நடக்காது எனவும், அனைவருடனும் ஆலோசனை நடத்தப்படும் எனவும், ஏற்கனவே நான் தமிழகத்துக்கு வந்தபோது, தமிழக மண்ணில் வைத்தே உறுதியாக சொல்லி இருக்கிறேன்.

மேலும், மோடி அரசு, தமிழகத்துக்கு உரிய நிதியை தரவில்லை எனவும் தி.மு.க., தரப்பு கூப்பாடு போடுகிறது. உண்மையில், 2014க்கு முந்தைய 10 ஆண்டுகளில் காங்கிரசுடன் தி.மு.க.,வும் அங்கம் வகித்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில், மொத்தம் 1.53 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே தமிழகத்துக்கு நிதியாக வழங்கப்பட்டது. ஆனால், பா.ஜ., அரசு கடந்த 10 ஆண்டுகளில் 5.48 லட்சம் கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இது, அவர்கள் வழங்கியதை விட மூன்றரை மடங்கு அதிகம்.

இது தவிர, உள்கட்டமைப்புக்கு 1.43 லட்சம் கோடி, சாலைகளுக்கு 63,000 கோடி, ரயில்வேக்கு 77,000 கோடி, 11 மருத்துவக் கல்லூரிகளுக்கு 2,000 கோடி, வீடு தோறும் குடிநீர் திட்டத்துக்கு 1.11 லட்சம் கோடி ரூபாய் என தமிழகத்துக்கு ஏராளமாக மத்திய அரசு செலவிட்டுள்ளது.

திருச்சியில் 20,000 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு, பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். எங்களை பொறுத்தவரை, தமிழக வளர்ச்சிக்கு நாங்கள் செய்ததில், எங்களுக்கு முழு திருப்தி உள்ளது. தி.மு.க., ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு மோசமாக உள்ளதால், பெரிய முதலீடுகள் வராமல் போய்விட்டன. தி.மு.க., அரசு தன் பங்கை ஆற்றத் தவறிவிட்டது.

ஒரு பக்கம், நிதி தரவில்லை என்று தி.மு.க., சொல்கிறது மறுபக்கம், நிதி தவறாக பயன்படுத்தப்படுகிறது என்கிறீர்கள்...

தமிழகத்தில் மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படாமலும், குறைபாடுகளுடன் செயல்படுத்துவதாலும் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய அரசின் திட்டங்களை தவறாக தி.மு.க., அரசு சித்தரிக்கிறது பல திட்டங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. பெயரளவில் அவர்கள் செயல்படுத்திய திட்டங்களும் ஊழல் குற்றச்சாட்டுகளில் இருக்கின்றன.

ஜ.சி.டி.எஸ்., நிதி தவறாக பயன்படுத்தப்படுவதாக மத்திய கணக்கு தணிக்கை அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது. தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திலும் ஏராளமான ஊழல் புகார்கள் உள்ளன. பிரதமரின் 'மாத்ரு வந்தனா யோஜனா' திட்டத்தில், முந்தைய நிதி ஒதுக்கீட்டை முறையாக செலவு செய்யவில்லை. ஆனால், அடுத்த தவணையை விடுவிக்குமாறு தி.மு.க., அரசு கோருகிறது. வீடுதோறும் குடிநீர் வழங்கும் 'ஜல் ஜீவன் மிஷன்' திட்டத்திலும் போலி இணைப்புகள் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுபோல், வீடு கட்டும் திட்டத்திலும் தகுதியற்றவர்களுக்கு வீடுகளை வழங்கி, உண்மையான பயனாளிகளை ஏமாற்றுவதாக புகார்கள் கூறப்படுகின்றன.

சட்டம் - ஒழுங்கு சீர்கேட்டால் தான் பெரிய முதலீடுகள் வராமல் போய்விட்டன என்கிறீர்கள். அப்படி என்ன பாழ் போய்விட்டது?

தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு நிலைமை பற்றி இனியும் மறைத்து வைக்க ஒன்றும் இல்லை. ஒரு மாநிலத்தின் சட்டம் - ஒழுங்கு மோசமான நிலைக்கு செல்லும்போது, அதன் விளைவுகளை அதிகமாக சந்திப்பது பெண்கள், விளிம்பு நிலை மக்கள் மற்றும் ஏழைகள்.

தமிழகத்தில் தி.மு.க., ஆட்சியில் போதைப்பொருள் பயன்பாடு, மதுபான மாபியா, மணல் மாபியா ஆகியவை உச்சத்தில் இருக்கின்றன.

தேசிய குற்ற வாரிய ஆவணங்களின்படி பார்த்தால், பட்டியல் ஜாதியினருக்கு எதிரான குற்றங்கள் 40 சதவீதம் அதிகரித்துள்ளன. தலித் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை வழக்குகளில் 21 சதவீதம் மட்டுமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இது, தேசிய அளவில் 39.1 சதவீதமாக இருக்கிறது.

நெல்லையில் தலித் பிரதிநிதிகள் பதவியேற்கக்கூட அனுமதிக்கப்படவில்லை கவர்னர் தலையிட வேண்டி இருந்தது. தலித் பஞ்சாயத்து தலைவர்களுக்கு நாற்காலி மறுக்கப்பட்டு, தரையில் அமர வேண்டிய கட்டாயம் நிலவுகிறது. ஊழல் அனைத்து எல்லைகளையும் தாண்டி விட்டது. தி.மு.க.,வின் ஊழல் பட்டியல் மிக நீளமானது. 39,775 கோடி ரூபாய் மதுபான ஊழல், 5,800 கோடி ரூபாய் மணல் ஊழல், 3,000 கோடி ரூபாய் 'எல்காட்' ஊழல், 4,400 கோடி ரூபாய் எரிசக்தி ஊழல், 3,000 கோடி ரூபாய் போக்குவரத்து துறை ஊழல் என ஏராளம்.

வேலைக்காக விண்ணப்பிப்பவர்களிடம் இருந்து லட்சக்கணக்கில் பணம் வசூல் நடக்கிறது. தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் ஒரு நபருக்கு 41,503 ரூபாய் மோசடி நடந்துள்ளது. அப்படி என்றால், மொத்த தொகையை கற்பனை செய்து பாருங்கள். வேலைக்காக விண்ணப்பிப்பவர்களிடம் இருந்து லட்சக்கணக்கில் பணம் வசூல் நடக்கிறது. தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் ஒரு நபருக்கு 41,503 ரூபாய் மோசடி நடந்துள்ளது. அப்படி என்றால், மொத்த தொகையை கற்பனை செய்து பாருங்கள்.

சரி, இவ்வளவும் சொல்கிறீர்கள். மத்திய அரசால் அதை கட்டுப்படுத்த முடியாதா?

தமிழகத்தில் தி.மு.க., ஆட்சியில் போதைப்பொருள் பயன்பாடு, மதுபான மாபியா, மணல் மாபியா ஆகியவை உச்சத்தில் இருக்கின்றன. ஆனால், சட்டம் - -ஒழுங்கு என்பது மாநில பிரச்னை.

எனவே, தேசிய குற்றவியல் அமைப்புகளுக்கு உள்ள அதிகார வரம்பிற்குள், தமிழகத்தில் உள்ள அந்த கும்பல்களை கைது செய்ய நாங்கள் முயற்சிக்கிறோம்.

தமிழகத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் அல்லது போலி ஆவணங்களுடன் வங்கதேசத்தினரும், ரோஹிங்கியாக்களும் சட்ட விரோதமாக குடியேறி இருப்பதாக கூறப்படுகிறதே?

தமிழகத்தில் எங்கள் அரசு அமைந்ததும், சட்ட விரோத குடியேறிகள் இல்லாத மாநிலமாக தமிழகத்தை நிச்சயம் மாற்றுவோம்.

எங்கள் அரசு என்கிறீர்கள். கூட்டணி ஆட்சி அமையுமா?

சட்டசபை தேர்தலுக்கு பின், தமிழகத்தில் நிச்சயமாக தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமையும். அதில், பா.ஜ.,வும் ஒரு அங்கமாக கண்டிப்பாக இருக்கும்.

இவ்வளவு உறுதியாக சொல்கிறீர்களே. எது நம்பிக்கையை கொடுக்கிறது?

லோக்சபா தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், தேசிய ஜனநாயக கூட்டணியே வெற்றி பெறும். எனவே, சட்டசபை தேர்தலில், கூடுதல் பிரசாரத்தின் வாயிலாக ஓட்டுகளை திரட்டினால், எங்கள் அரசு அமையப் போவது நிச்சயம்.

ஹிந்து மத வெறுப்பு பிரசாரத்தில் தி.மு.க., ஈடுபட்டுள்ளது. இதை, அரசியல் பிரச்னையாக பா.ஜ., கொண்டு செல்லுமா?

இங்கு ஒரு பிரச்னையை, நாங்கள் உருவாக்கத் தேவையில்லை. எந்தவொரு மத சித்தாந்தத்துக்கும் எதிராக அவர்கள் பேசினால், தன்னிச்சையாகவே மக்களை விரோதித்துக் கொள்கின்றனர். நாங்கள் எதுவும் செய்யத் தேவையில்லை. அவர்களின் பாவங்களுக்கு தக்க தண்டனையை, தமிழக மக்கள் கொடுப்பர்.

பொது சிவில் சட்டத்தை இன்னும் ஏன் கொண்டு வரவில்லை?

பா.ஜ., அரசு எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் பொது சிவில் சட்டத்தை கொண்டு வர, நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். பல மாநிலங்கள், அதற்கான குழுக்களை அமைத்துள்ளன. உத்தராகண்டில் ஏற்கனவே அமலுக்கு வந்து விட்டது. மற்ற மாநிலங்களில், இதற்கான நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளன.

'லவ் ஜிஹாத்' தொடர்பான சட்டத்தை கொண்டு வர, மஹாராஷ்டிரா அரசு திட்டமிட்டு உள்ளது. இது போன்ற சட்டத்தை மத்திய அரசு கொண்டு வருவது பற்றி பரிசீலிப்பீர்களா?

மத்திய அரசு கொண்டு வந்த மூன்று குற்றவியல் சட்டங்கள், அனைத்தையும் உள்ளடக்கி இருக்கின்றன. எனினும், மஹாராஷ்டிரா மாநில அரசின் சட்டம் வரும்போது, அது பற்றி யோசிப்போம்.

மேற்கு வங்கத்தில் ஹிந்துக்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் நடக்கின்றன. முர்ஷிதாபாத் வன்முறைக்கு பிறகும் கூட, அந்த மாநில அரசு எந்த வலுவான நடவடிக்கையையும் எடுக்கவில்லையே?

மே.வங்க அரசுக்கு, மத்திய உள்துறை அமைச்சகம் சில அறிவுறுத்தல்களை வழங்கியதோடு, அறிக்கைகளை கேட்டுள்ளது. அங்கு, பா.ஜ., அரசு அமையும்போது, இது போன்ற பாகுபாடு கொடுமையில் இருந்து மக்கள் விடுவிக்கப்படுவர். ஓட்டு வங்கிக்காக, அங்குள்ள திரிணமுல் காங்கிரஸ் அரசு நடுநிலையுடன் செயல்படவில்லை.

கடந்த சில மாதங்களாகவே, பா.ஜ., தலைவர் பதவிக்கு பல்வேறு பெயர்கள் கூறப்படுகின்றன. யார் அடுத்த தலைவர்?

இதுவரை, அடுத்த பா.ஜ., தலைவர் யார் என தீர்மானிக்கவில்லை வெகு விரைவில் முடிவு செய்யப்படும்.

# ஒன்றிணைந்த எதிர்ப்பின் அவசியம்!

பத்மா அர்விந்த்

பேராசிரியர் சுசான் ஜே. ஷெர்மன், அட்ரியன் ஈ. ஈட்டன் ஆகியோரின் **'Informal Workers and Collective Action: A Global Perspective'** என்கிற நூல் பணியிடங்களில் நடக்கும் அநீதிகளுக்கு எதிரான தொழிலாளர்களின் ஒன்றிணைந்த போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இந்த நூலில் குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் உலகளவில் நடந்துள்ள பல்வேறு தொழிற்சாலை அத்துமீறல்கள், குறிப்பாக நைக் தொழிற்சாலைகளில் பெண்கள் அனுபவித்த துன்பங்கள், பணியிட வன்முறையின் கொடூரத்தை எடுத்துக்காட்டுகின்றன. நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள், சிறார்கள் என்றில்லை, கூலித் தொழிலாளிகள், கேளிக்கைத் துறையில் இருக்கும் பெண்கள், ஆண்கள் மற்றும் எல்லாத் துறைகளிலும் அதிகாரம் உள்ளோர் தங்கள் கீழே இருக்கும் பணியாளரிடம் செலுத்தும் ஆதிக்க வன்முறை அதிகம்.

**Global Alliance** அமைப்பின் அறிக்கையின்படி, இந்தோனேசியா மற்றும் ஆசியாவின் பிற பகுதிகளில் உள்ள நைக் தொழிற்சாலைகளில் பணியாளர்கள் தினசரி உடல், பாலியல் மற்றும் வாய்மொழி துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். 9 தொழிற்சாலைகளில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நைக் ஊழியர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களில், தொழிற்சாலை மேற்பார்வையாளர்கள் பெண் ஊழியர்களைப் பாலியல் உறவுக்கு வற்புறுத்துவது மற்றும் அசெம்பிலி லைனில் வேலை செய்யும்போது அவர்களைத் தொட்டுத் தொந்தரவு செய்வது போன்ற சாட்சியங்கள் பதிவாகின.

ஆய்வில் பங்கேற்ற 56 சதவீத ஊழியர்கள், மேற்பார்வையாளர்கள் சக பணியாளர்களை வாய்மொழியாகத் துன்புறுத்துவதைக் கண்டதாகவும், 15.7 சதவீதம் பேர் முறையற்ற தொடுதல்களை அவதானித்ததாகவும், 13.7 சதவீதம் பேர் உடல் வன்முறையைப் பார்த்ததாகவும் தெரிவித்தனர்.

தொழிற்சாலை தண்டனைகளில் கழிப்பறைகளைச் சுத்தம் செய்வது மற்றும் தொழிற்சாலை வளாகத்தைச் சுற்றி ஓடுவது போன்றவை அடங்கும். "வீழ்ர ஊாநடெ புசூழரி தொழிற்சாலையில், தவறு செய்த பெண்தொழிலாளர்களைச் சூரிய வெளிச்சத்தில் நிற்க வைப்பது போன்ற கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. "அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். இரண்டு மணி நேரம் வெயிலில் நின்ற பிறகு மட்டுமே அவர்களின் வேலையைத் தொடர அனுமதிக்கப்பட்டார்கள்" என்று அங்கு பணியாற்றிய 47 வயதான உஜாங் சுஹேந்தி கூறினார்.

நைக்கின் சொந்த ஆய்வில், நிறுவனத்தின்பாதி தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வாரத்தில் ஒரு நாள் விடுமுறை மறுக்கப்படுவதும், கழிப்பறை பயன்பாட்டிற்கான அணுகல் மறுக்கப்படுவதும் கண்டறியப்பட்டது. பல தொழிலாளர்கள் வாரத்திற்கு 60 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர், சட்டப்பூர்வ குறைந்தபட்ச ஊதியத்தைக்கூடப் பெறவில்ல.

தாய்லாந்தில் உள்ள உழபெ ளுநபெ முவைவவைபெ தொழிற்சாலையில், பர்மிய புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களுக்குச் சட்டப்படி செலுத்த வேண்டிய கூ600,000 ஊதியத்தைத் 'தானாக முன்வந்து' கைவிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டனர். நான்கு ஆண்டுகளாக நைக் இந்த வேலை திருட்டை மறுத்து வருகிறது.

பணியிடங்களில் அதிகாரங்கள் உள்ளவர்கள் செய்யும் வன்முறைகளைப் பலரும் அறிந்தே இருப்பார்கள். எல்லாவற்றையும் மனிதவள துறைக்குச் சென்று புகார் அளிக்க பல வசதிகளும் முறைகளும் இருக்கும். ஆனாலும் அவற்றால் பெரும்பான்மையான இடங்களில் பலன் இருக்காது. மீறிப்போனால், புகார் அளித்தவருக்கு வேறு துறை அல்லது நல்ல புகழ் அல்லது முன்னேற்றம் கிடைக்கக்கூடிய திட்டங்களில் பங்குகொள்ள வாய்ப்பு கிடைக்காது. எனவே அவருக்கு ஆதரவாக இருப்போருக்கும் அந்தப் பழி வரும் என்பதால் பொதுவாகப் பலரும் விலகியே இருக்க நினைப்பார்கள்.

பல பெண்களுக்கு வீட்டிலும் ஓரிரு நேரத்தில் ஆதரவு கிடைத்தாலும் நாளாவட்டத்தில், "உன்னால் சாமர்த்தியமாகச் சமாளிக்கத் தெரியவில்லை. இதனால்தான் முற்காலத்தில் பெண்களைப் பணிக்கு அனுப்பவில்லை. எல்லாவற்றிற்கும் ஒரு அழுகை" என்று சொல்லிவிடுவார்கள்.

இடைநிலை பணியாளர்கள், தலைமைப் பதவியில் இருக்கும் பணியாளர்கள் என்றில்லை. கடைநிலைப் பணியாளர்களுக்கும் இதே நிலைதான். பல பெண்கள் அவர்கள் கணவர்களின் கண் எதிரேயே பாலியல் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதைப் பேராசிரியர் சுசன் ஷெர்மன் தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், எதிர்த்து நின்றால், அவர்கள் பணியை இழக்க நேரிடும். அதனால் அவர்கள் குடும்பம் வறுமையில் வாடும். குழந்தைகள் பசியில் துன்புறும்.



பணியிடம் இப்படி எனில், கல்லூரி வளாகங்களிலும் நிலை மோசமானது. பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் மாணவ மாணவியர்களைப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்குவது, கல்வி வாய்ப்புகளைப் பணயமாக வைத்து அவர்களை மிரட்டுவது போன்ற நிகழ்வுகள் பரவலாக உள்ளன.



சுபைாவ வுழ டீந அமைப்பு பார்வையாளர் தலையீட்டிற்கான ஐந்து னு உத்திகளை உருவாக்கியுள்ளது – **Distract** (கவனச்சிதறல்), **Delegate** (பொறுப்பு மாற்றம்), **Document** (ஆவணப்படுத்தல்), **Delay** (தாமதம்), மற்றும் **Direct** (நேரடி தலையீடு).

1. கவனச்சிதறல் **(Distract)**

இது ஒரு நுட்பமான மற்றும் ஆக்கபூர்வமான தலையீட்டு முறை. இதன் நோக்கம் துன்புறுத்தலைக் குறுக்கிடுவதன் மூலம் சம்பவத்தை நிறுத்து. நல்ல கவனச்சிதறல் உத்தியின் முக்கிய அம்சங்கள்:

1. துன்புறுத்துபவரைப் புறக்கணித்து, துன்புறுத்தப்படுபவருடன் நேரடியாக உரையாடுவது. 2. நடந்து கொண்டிருக்கும் துன்புறுத்தலைப் பற்றி பேசாமல், முற்றிலும் தொடர்பற்ற வேறு விஷயத்தைப் பற்றி பேசுவது.

வழி தெரியாதது போல் நடித்து, துன்புறுத்தப்படுபவரிடம் திசைகளைக் கேட்பது.

நேரத்தைக் கேட்பது.

சாதாரண உரையாடலில் ஈடுபடுத்துவது.

2. பொறுப்பு மாற்றம் **(Delegate)**

சில நேரத்தில் மக்கள் 'துன்புறுத்தலில் தலையிட காவல்துறையை அழைக்கலாமா?' என்று கேட்கிறார்கள். எங்கள் பதில் என்னவென்றால், துன்புறுத்தப்படும் நபரிடம் சோதித்து, அவர்கள் தங்கள் சார்பாகக் காவல்துறையை அழைக்க வேண்டும் என்று வெளிப்படையாகக் கேட்காத வரை நீங்கள் காவல்துறையைத் தொடர்புகொள்ளக் கூடாது.

பாதுகாப்பான பொறுப்பு மாற்ற வழிகள்:

நிர்வாகத்திடம் தெரிவிப்பது

உசு துறையை அணுகுவது

யூனியன் பிரதிநிதிகளை அணுகுவது

நம்பகமான மூத்த ஊழியர்களை அறிவிப்பது

3. ஆவணப்படுத்தல் **(Document)**

ஆவணப்படுத்தல் என்பது துன்புறுத்தல் சம்பவத்தைப் பதிவு செய்வது அல்லது குறிப்புகள் எடுப்பதைக் குறிக்கிறது. ஆனால் இதில் கவனமாக இருக்க வேண்டும்:

பாதிக்கப்பட்டவரின் அனுமதியின்றி காணொளி அல்லது ஒளிப்படங்களைப் பகிரக் கூடாது

சட்டச் சிக்கல்களை உருவாக்காமல் இருக்க வேண்டும்

4. தாமதம் **(Delay)**

எப்போதும் உடனடியாகத் தலையிடுவது பாதுகாப்பானது அல்ல அல்லது பொருத்தமானது அல்ல. பார்வையாளர் தலையீடு என்பது பார்வையாளரை ஆபத்தில் ஆழ்த்துவதல்ல. சில சமயங்களில் சில நிமிடங்கள் அல்லது மணிநேரங்கள் காத்திருந்து, பின்னர் துன்புறுத்தப்படுபவரை அணுகுவது நல்லது.

5. நேரடி தலையீடு **(Direct)**

நேரடி தலையீடு என்பது பார்வையாளர் ஒருவர் யாரோ ஒருவர் பாதிப்புக்கு ஆளாகும் அல்லது ஆபத்தில் இருக்கும் சூழ்நிலையை நிறுத்த அல்லது அமைதிப்படுத்த நடவடிக்கை எடுப்பது. தலையிடுவதற்கு முன் ஆபத்தின் அளவை மதிப்பிடுவது முக்கியம்.

நேரடி தலையீட்டின் முதல் முக்கிய விஷயம் பதிலளிக்க முடிவு செய்வதற்கு முன் சூழ்நிலையை மதிப்பிடுவது. நேரடி தலையீட்டின் இரண்டாவது முக்கிய விஷயம் அதைக் குறுகிய மற்றும் சுருக்கமாக வைத்திருப்பது. உரையாடல், விவாதம் அல்லது வாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் -இதுதான் சூழ்நிலைகள் தீவிரமடையும் விதம்.

**ABC** அணுகுமுறை

தலையிடுவதற்கு முன், **ABC** அணுகுமுறையை முயற்சிக்கவும். பாதுகாப்பிற்காக மதிப்பிடுங்கள்: யாராவது சிக்கலில் இருப்பதைக் கண்டால், நீங்கள் பாதுகாப்பான முறையில் எப்படியாவது உதவ முடியுமா என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள். நினைவில் கொள்ளுங்கள், உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு முன்னுரிமை -உங்களை ஆபத்தில் ஆழ்த்த வேண்டாம்.

பார்வையாளனாக நமக்கு இரண்டு வழிகள் உள்ளன:

செயலற்ற அணுகுமுறை: என்ன நடந்தாலும், நமக்கு நடக்காதவரை சரி என்று கண்டுகொள்ளாமல் விலகுவது. இது தவறான அணுகு முறை.

செயலூக்கமான அணுகுமுறை: அதைத் தடுக்க முயல்வது மற்றும் எப்படித் தடுப்பது என்கிற வழிமுறைகளைத் தெரிந்து கொள்வது

பார்வையாளர் தலையீடு, பணியிடம் முழுவதும் பொறுப்புணர்வின் கலாசாரத்தை உருவாக்க உதவும். பொருத்தமற்ற நடத்தையைக் கண்டும் நடவடிக்கை எடுப்பதன் மூலம், பார்வையாளர்கள் துன்புறுத்தல் பொறுத்துக்கொள்ளப் படாது என்பதை நிறுவ உதவலாம் மற்றும் உங்கள் நிறுவனத்தின் துன்புறுத்தல் எதிர்ப்பு மற்றும் பாகுபாடு எதிர்ப்பு கொள்கைகளை வலுப்படுத்தலாம்.

இன்று நமது தோழருக்கோ தோழியருக்கோ நடப்பது

(8ஆம் பக்கம் பார்க்க..)

# அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக பேச்சு நடத்த மாட்டோம்: அமெரிக்காவுக்கு ஈரான் பதிலடி




அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக, அடுத்த வாரம் அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஈரான் அணுஆயுதங்களை தயாரிக்க ஆரம்பம் முதல் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஈரானின் அணுசக்தி கட்டமைப்புகளை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரானும் பதிலடி கொடுக்க மத்திய கிழக்கு பகுதியில் பதற்றம் உண்டானது.

ஈரானின் போர்டோவ், நடான்ஸ், இஸ்பஹான் ஆகிய 3 அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்காவும் தாக்குதல் நடத்தியது. பின்னர், ஈரான், இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுக்கு இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. அமெரிக்காவின் தாக்குதலில், ஈரானின் அணுசக்தி நிலையங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

இந்த சூழலில், அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக அடுத்த வாரம் ஈரான் உடன் பேச்சுவார்த்தை நடைபெறும் என அதிபர் டிரம்ப் அறிவித்தார். இது குறித்து ஈரான் செய்தி சேனலுக்கு, அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறியதாவது: அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக, அடுத்த வாரம் அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம். அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமா? இதனால் ஈரானுக்கு ஏதும் பலன் கிடைக்குமா என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறோம். அமெரிக்கா நடத்திய தாக்குதலில் அணுசக்தி நிலையங்கள் சேதம் அடைந்துள்ளது. அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்திய தாக்குதல்கள் ஈரானின் அணு ஆயுத திறனை கட்டுப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# என்.பி.டி.,யில் இருந்து ஈரான் வெளியேறுவது ஆபத்து எச்சரிக்கும் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான்



அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (வேூ) இருந்து ஈரான் வெளியேறுவது ஆபத்து என்று பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் எச்சரித்துள்ளார்.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் ஈரானின் செயலுக்கு இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. அமெரிக்கா பலமுறை எச்சரித்தும் அணுஆயுதங்கள் தயாரிப்பை கைவிட ஈரான் மறுத்து வந்தது.

எனவே, இஸ்ரேலுடன் போர் நடத்தி வந்த ஈரானின் அணுசக்தி நிலைகள் மீது அமெரிக்கா பயங்கர தாக்குதல் நடத்தியது. இதில், அந்நாட்டின் 3 முக்கிய அணுசக்தி நிலைகள் பெரிதும் சேதமடைந்தன.

இதனிடையே, அணு ஆயுதப்பரவல்தடை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக ஈரான் அறிவித்துள்ளது. இந்த முடிவுக்கு சர்வதேச அணுசக்தி முகமை உள்பட பல்வேறு உலக நாடுகள் அதிருப்தி தெரிவித்தன.

அணு ஆயுத திட்டத்தை ஈரான் மீண்டும் துவக்கினால் தாக்குவோம்: அதிபர் டிரம்ப்

இந்த நிலையில், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து ஈரான் வெளியேறுவது ஆபத்தானது என்று பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் எச்சரித்துள்ளார்.

ஐரோப்பா ஒன்றியத்தின் மாநாட்டில் பங்கேற்ற பிறகு செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது ஈரான் அணுசக்தி நிலைகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் சிறப்பான ஒன்று. ஆனால் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்திலிருந்து ஈரான் வெளியேறுவது மோசமானதாகும். மேலும், இது இந்த அமைப்பை பலவீனப்படுத்துவதாக அமைந்து விடும். எனவே, அணு ஆயுதங்கள் உற்பத்தியை ஈரான் மீண்டும் தொடங்குவதை தடுக்க வேண்டும், என்றார்.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (வேூ) என்பது அணு ஆயுதங்கள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்களின் பரவலைத் தடுக்க உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்பாகும். இந்த அமைப்பில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

தற்போது, இந்த உறுப்பு நாடுகளுடன் ஈரான் விவகாரம் தொடர்பாக பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்துள்ளார். முதற்கட்டமாக அமெரிக்க அதிபர் டிரம்பிடம் தொலைபேசியில் ஆலோசனை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விரைவில் இந்தியாவுடன் மிகப்பெரிய ஒப்பந்தம் சொல்கிறார் டிரம்ப்



விரைவில் இந்தியாவுடன் மிகப்பெரிய ஒப்பந்தம் மேற்கொள்ளப் போவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது அமெரிக்காவுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள உலக நாடுகள் ஆர்வம் காட்டுகிறதா? என்று கேட்கிறார்கள். நேற்று தான் சீனாவுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது. சிறப்பான ஒப்பந்தங்கள் எங்களிடம் உள்ளன. விரைவில் இந்தியாவுடன் மிகப்பெரிய ஒப்பந்தத்தை மேற்கொள்ள உள்ளோம். தற்போது சீனாவில் இருந்து ஒப்பந்தத்தை தொடங்கியுள்ளோம்.

நாங்கள் அனைத்து நாடுகளிடமும் ஒப்பந்தம் செய்ய மாட்டோம். சிலருக்கு நன்றி தெரிவித்து கடிதம் அனுப்புவோம். நீங்கள் 25, 35, 45 சதவீதம் வரி செலுத்த வேண்டும். ஒப்பந்தம் செய்வதற்கான எளிய வழி அதுதான். ஆனால், அமெரிக்க மக்கள் அதனை விரும்பவில்லை. அவர்கள் அதில் சிலவற்றை செய்ய விரும்புகிறார்கள். நான் செய்வதை விட அதிகமான ஒப்பந்தங்களைச் செய்ய விரும்புகிறார்கள்.

முன்பு எப்போதும் நடக்க முடியாத விஷயங்கள் இப்போது நடக்கின்றன. ஒவ்வொரு நாடுகளுடனும் அமெரிக்காவுக்கு சிறந்த உறவுகள் உள்ளன, இவ்வாறு அவர் கூறினார . (ஐ)



# அமெரிக்காவின் முகத்தில் அறைந்தது ஈரான்: சொல்கிறார் கமேனி

"அமெரிக்காவின் முகத்தில் அறைந்துள்ளோம்," என ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அந்நாட்டு மக்களுக்கு டிவி மூலம் அவர் ஆற்றிய உரையில் கூறியுள்ளதாவது: நகர்ப்புறம் மற்றும் ராணுவ இடங்களை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலையும், அந்நாட்டின் பல முனை பாதுகாப்பையும் ஈரான் ராணுவப்படைகள் வெற்றிகரமாக முறியடித்துள்ளன. அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினாலும் அந்நாடு எதிர்பார்த்த வெற்றியை பெற முடியவில்லை. இதனால், டிரம்ப் நடிக்க வேண்டியிருந்தது.

எதிர்காலத்தில் ஈரானுக்கு எதிராக நடக்கும் எந்த அத்துமீறலுக்கும், பெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும். அமெரிக்க தளத்தை தாக்கியது பெரிய விஷயம். எதிர்காலத்தில் அத்துமீறல்கள் தொடர்ந்தால், அதன் மீதான தாக்குதல் தொடரும்.

மதிக்காமல் சண்டையிட்ட இஸ்ரேல் - ஈரான் போர் நிறுத்தம் அறிவித்த டிரம்ப் 'அப்செட்'

நமது எதிரிகள், ஏவுகணைகள் அல்லது அணுசக்தி திட்டங்கள் என தாக்குதலுக்கு காரணம் கூறினர். ஆனால், நாம் சரண் அடைவோம் என்பதே அவர்களின் உண்மையான நோக்கமாகும்.

டிரம்ப் பேசும்போது, ஈரான் சரணடைய வேண்டும் எனச் சொல்கிறார். ஈரான் சரணடைந்தால் அமெரிக்கா திருப்திப்படும் என்ற உண்மையை டிரம்ப் வெளிப்படுத்தி உள்ளார். ஆனால், சரணடைவது எப்போதும் நடக்காது. நமது தேசம் மிகவும் சக்திவாய்ந்தது.

அமெரிக்காவின் முகத்தில் ஈரான் அறைந்துள்ளது. அமெரிக்கா தலையிடாவிட்டால் இஸ்ரேல் அழிந்து இருக்கும். இதனை உணர்ந்ததால் தான் அமெரிக்க இந்த போரில் தலையிட்டது. ஈரானின் கடுமையான தாக்குதல் காரணமாக, கடுமையாக நசுக்கப்பட்டதால், இஸ்ரேல் சரியும் நிலை ஏற்பட்டது. இவ்வாறு கமேனி கூறினார். (ஐ)

## வவுனியா வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி பிரேரிக்கப்பட்டார். தேசிய மக்கள் சக்தி சார்பில் ஞானமுத்து அகிலன் பிரேரிக்கப்பட்டார்.

தவிசாளராக இருவரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டமையால் வாக்கெடுப்பின் மூலம் அதனைத் தெரிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில் வாக்கெடுப்பை இரகசியமாகவா அல்லது பகிரங்கமாகவா நடத்துவது என ஆணையாளரால் கோரப்பட்டது

இதன்போது தெரிவுகளை இரகசியமாக நடத்துமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்தனர். அல்லது இரகசிய வாக்கெடுப்பா அல்லது பகிரங்க வாக்கெடுப்பா என்பதை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நடத்துமாறு கேட்டனர். அதற்கு ஆணையாளர் மறுப்புத் தெரிவித்த நிலையில் தேசிய மக்கள் சக்தி மற்றும் இலங்கைத் தொழிலாளர் கட்சியின் இரு உறுப்பினர்கள் என 8 பேர் சபையில் இருந்து வெளிநடப்பு செய்திருந்தனர்.

சபையில் மீதம் 15 உறுப்பினர்கள் இருந்த நிலையில் அவர்கள் அனைவரும் தெரிவுகளைப் பகிரங்கமாக நடத்துமாறு வாக்களித்திருந்தனர். பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

அந்தவகையில் தவிசாளராகப் பெயர் பிரேரிக்கப்பட்ட கிருஸ்ணவேணிக்கு 15 வாக்குகள் ஆதரவாகக் கிடைக்கப் பெற்றன. அவருக்குத் தமிழரசுக் கட்சியின் 5 வாக்குகளும், சங்கு கூட்டணியின் 3 வாக்குகளும், ஐக்கிய மக்கள் சக்தியின் 2 வாக்குகளும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்சின் 4 வாக்குகளும், சர்வஜன அதிகாரத்தின் ஒரு வாக்குமாக 15 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்டன.

வெற்றி பெறுவதற்கு 12 உறுப்பினர்களின் ஆதரவு போதுமான நிலையில் 15 வாக்குகள் கிடைக்கப் பெற்ற கிருஸ்ணவேணி புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதனின் பெயர் பிரேரிக்கப்பட்டது. உப தவிசாளராக வேறு நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாத நிலையில் சஞ்சுதன் போட்டியின்றி உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## வவுனியா தெற்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மண்டபத்தில் இன்று காலை நடைபெற்றது.

தவிசாளர் தெரிவுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பாலேந்திரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த கார்த்தீபன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இதன்போது தெரிவுகளை இரகசியமாக நடத்துமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்தனர். அதற்கு ஆணையாளர் மறுப்புத் தெரிவித்த நிலையில் தேசிய மக்கள் சக்தி, இலங்கைத் தொழிலாளர் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் 9 பேர் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

சபையில் மீதம் 18 உறுப்பினர்கள் இருந்த நிலையில் அவர்களில் 17 பேர் தெரிவுகளை பகிரங்கமாக நடத்துமாறு வாக்களித்திருந்தனர். பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

அந்தவகையில் தவிசாளராகப் பெயர் பிரேரிக்கப்பட்ட பாலேந்திரனுக்கு ஆதரவாக 17 வாக்குகள் கிடைக்கப் பெற்றன.

அவருக்குத் தமிழரசுக் கட்சியின் 5 வாக்குகளும், சங்குக் கூட்டணியின் 3 வாக்குகளும், ஐக்கிய மக்கள் சக்தியின் 3 வாக்குகளும், ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் 2 வாக்குகளும், ஈ.பி.டி.பியின் ஒரு வாக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு வாக்கும், சர்வஜன அதிகாரத்தின் ஒரு வாக்கும், சுயேச்சைக் குழுவின் ஒரு வாக்குமாக 17 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்டன.

வெற்றி பெறுவதற்கு 14 உறுப்பினர்களின் ஆதரவு போதுமான நிலையில் 17 வாக்குகள் கிடைக்கப் பெற்ற பாலேந்திரன் புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக சங்குக் கூட்டணியின் பாலசுப்பிரமணியம் கோணேஸ்வரியின் பெயர் பிரேரிக்கப்பட்டது. உப தவிசாளராக வேறு நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாத நிலையில் கோணேஸ்வரி உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, தமிழ் மக்கள் கூட்டணியின் ஒரு உறுப்பினர் தவிசாளர் தெரிவின் போது நடுநிலை வகித்திருந்தார்.

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேவை முடக்கல் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண தனியார் போக்குவரத்துச் சேவை சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இன்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற கால அட்டவணைக்கு முரணான சேவை ஒன்றால் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து, யாழ். மத்திய பஸ் நிலையத்தில் தனியார் மற்றும் இ.போ.ச. தரப்பினரிடையே குழப்ப நிலை ஏற்பட்டது.

இதையடுத்து சில நிமிடங்கள் வாகன நெரிசல் ஏற்பட்டதையடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை சுமுகமாக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர்,

"யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து கிளிநொச்சி சாலைக்கு சொந்தமான பஸ் ஒன்று குறித்த சாலை முகாமையாளரின் உத்தரவுக்கமைய சட்டவிரோத சேவையை வவுனியா நோக்கி முன்னெடுக்க முயன்றது.

இதை அவதானித்த நாம் குறித்த சட்டவிரோதச் செயற்பாட்டை கண்டித்து அதை நிறுத்துமாறு வலியுறுத்தினோம். ஆனால், இ.போ.சவினர் அடாத்தாக சேவையை முன்னெடுக்க முயன்றனர்.

ஏற்கனவே இந்தச் சட்டவிரோதம் குறித்து துறைசார் தரப்பினரிடமும், போக்குவரத்து அதிகார சபை, துறைசார் அமைச்சு, வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரிடமும் முறைப்பாட்டிருந்ததுடன், பொலிஸ்நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்திருந்தோம். ஆனாலும், இதுவரை எந்தவொரு தீர்வும் கிடைக்காத நிலையே காணப்படுகின்றது.

அத்துடன் இ.போ.சவினர் அடாத்தாக சட்டத்துக்கு முரணாக செயற்படுவதுடன் தனியார் போக்குவரத்துச் சேவையை முடக்கவும் முயன்று விபத்துக்கள் ஏற்படுவதற்கும், முரண்பாடுகளை உருவாகுவதற்கும் வலிந்து இழுக்கின்றனர்.

எனவே, இவ்வாறான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத அத்துமீறிய செயற்பாடுகளைக் கண்டித்தும், அவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி தனியார் பஸ்களின் பாதுகாப்பான சேவையை உறுதி செய்வதற்காகவும் எதிர்வரும் செவ்வாயன்று வடக்கு மகாணம் தழுவிய ரீதியில் முழுமையான சேவை முடக்கல் போராட்டம் ஒன்றை நாம முன்னெடுக்கவுள்ளோம்." - என்றார்.

## யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டம் ஆரம்பமான நிலையில் கடந்த வாரம் ஏற்பட குழப்பத்தால் ஒத்திவைக்கப்பட்ட சுகாதாரக் குழுவுக்கான உறுபினர்கள் தெரிவு நடைபெற்றது.

அதன் பின்னர் மேலும் சில குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

குழுக்களுக்கான உறுப்பினர்கள் தெரிவு முடிந்தவுடன் கூட்டத்தை முடித்துக்கொள்வதாக மேயர் அறிவித்து சபையில் இருந்து வெளியேறினார்.

இந்நிலையில், சபையின் உறுப்பினர் தர்சானந்த்,

"கடந்த 23 ஆம் திகதிய கூட்டத்தில் சுகாதாரக் குழுவில் உள்வாங்கப்பட உறுப்பினர்கள் குறித்து ஏற்பட்ட இணக்கமின்மையால் கூட்டம் நிறுத்தப்பட்டு இன்று அதன் தொடர்ச்சி நடைபெற்றது. ஆனால், அன்று குழப்பத்தை ஏற்படுத்திய அதே தெரிவுகள் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இது எவ்விதத்தில் நியாயமானது.? எமக்கு எமது கருத்துக்களைக் கூற சபையில் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டாம்." - என்று கோரிக்கை விடுத்து சபையின் குறுக்கே சென்று மேயர் வெளியேறுவதைத் தடுத்ததால் குழப்பம் ஏற்பட்டது.

ஆனாலும், மேயர் வெளியேறியதால் தமக்கு தமது எதிர்ப்பைக் காண்பிக்க நியாயம் கிடைக்கவில்லை எனவும், இது சபையின் நன்மைக்கு ஏற்றதல்ல எனவும் தர்சானந்த் குறிப்பிட்டார்.

# வடக்கில் காணிகளை கையகப்படுத்துவதற்கான வர்த்தமானிக்கு தடை– நீதிமன்றின் ஆதிரடி உத்தரவு!

வடக்கில் 5,941 ஏக்கர் காணிகளை அரச காணிகளாக்கி கையகப்படுத்துவதற்கான வர்த்தமானிக்கு தடை விதித்து உயர் நீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டத்தரணி ஆ. யு. சுமந்திரனால் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று (27) விசாரிக்கப்பட்ட பின்னர் குறித்த வர்த்தமானியை தற்காலிகமாக வலிதற்றதாக்கி இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட, சம்பத் அபேகோன் மற்றும் சம்பத் விஜயரத்ன உள்ளிட்ட நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான அடுத்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 02ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீலங்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி விமான சேவை நிறுவனத்தின் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வந்த விசாரணைக்கமையவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் மனைவியான ஷிராந்தி ராஜபக்ஷவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழரசுக் கட்சியின் வசமானது மாந்தை கிழக்கு பிரதேச சபை

முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச சபையின் அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியது.

இதேநேரம், உப தவிசாளர் பதவியை ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி கைப்பற்றியுள்ளது.

13 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையின் அதிகாரப் பதவிகளுக்கான தெரிவு நேற்று வியாழக்கிழமை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்கான பகிரங்க வாக்கெடுப்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இராசையா நளினி 7 வாக்குகளைப் பெற்று தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சக்தியும் வாக்களித்தது.

உப தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி சத்தியவரதன் 6 வாக்குகளைப் பெற்று தெரிவானார்.

மாந்தை கிழக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 4 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்பன தலா 2 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதி செய்யப்பட்ட தரமற்ற உப்பு தொகையை திருப்பியனுப்ப பரிந்துரை!

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 05 கொள்கலன்களில் உள்ள உப்பு தொகை தரமற்றதாக உள்ளதால் அவற்றை திருப்பியனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப்பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து உப்பு கொள்கலன்களும் தரநிலை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட போது, 5 கொள்கலன்களில் உள்ள உப்பு தொகை தரமற்றவை என கண்டறியப்பட்டு இலங்கையின் தர ஆய்வுகளில் நிராகரிக்கப்பட்டுள்ளதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து சுமார் 2000 கொள்கலன்கள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நோர்வூட் பிரதேச சபை தேசிய மக்கள் சக்தி வசம்!

*நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஜெஹனஸ் பிரான்சிஸ் எலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.*

*நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் தெரிவுக்கான அமர்வு மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஏ.எம். கே.பி.கே. சமிலா அத்தபத்து தலைமையில் நோர்வூட் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இன்றையதினம் நடைபெற்றது.*

*இதன்போது தவிசாளர் பதவிக்காக தேசிய மக்கள் சக்தி சார்பாக ஜெஹனஸ் பிரான்சிஸ் எலன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக கணபதி குழந்தைவேல் ரவி ஆகியோர் போட்டியிட்டனர்.*

*நடைபெற்ற பகிரங்க வாக்கெடுப்பில் ர் ஜெஹனஸ் பிரான்சிஸ் எலன் 12 வாக்குகளையும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கணபதி குழந்தைவேல் ரவி 07 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.*

*இதன்படி தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஜெஹனஸ் பிரான்சிஸ் எலன் பெரும்பான்மை வாக்குகளை பெற்றுபுதிய தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் நடராஜா சிவக்குமார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

# ஒன்றிணைந்த எதிர்ப்பின் அவசியம்!

நாளை அனைவருக்கும் பரவலாம். அதிகார சக்தியின் கரங்கள் நீளும். அதை இப்போதே தடுக்க வேண்டும். ஒன்றுகூடி அதைத் தடுக்க வேண்டும். அதனால் என்ன இழப்பு வந்தாலும் பரவாயில்லை என்று துணிய வேண்டும்.

சகபணியாளர்கள் பணியிட சுகாதார மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பிற்குள் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச் சூழலை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் ஒத்துழைக்கும் விதம் பார்வையாளர்களின் ஆதரவை அணிதிரட்டுவதில் பங்கு வகிக்கிறது. பணியிட பாதுகாப்பில் பார்வையாளர்களின் ஈடுபாடு பாலியல் துன்புறுத்தல் மற்றும் பணியிடத்தில் பிற பாலின அடிப்படையிலான தவறான நடத்தைகளுடன் தொடர்புடைய பாரம்பரிய விதிமுறைகளை மறுவடிவமைப்பதற்கு வழிவகுக்கும். என்ன எல்லாம் செய்யலாம்?

சூழ்நிலையை மதிப்பிடுங்கள்: தலையிடுவது பாதுகாப்பானதா?


உங்கள் வல்லமையை அறியுங்கள்: நீங்கள் என்ன செய்ய முடியும்?

ஆதரவு அமைப்புகளைப் பயன்படுத்துங்கள்: யூனியன்கள், உசு, நம்பகமான சகாக்கள்

ஆவணப்படுத்துங்கள்: சம்பவங்களைப் பதிவு செய்யுங்கள்

தொடர்ந்து ஆதரவளியுங்கள்: பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ச்சியான உதவி வழங்குங்கள்

நிறுவனங்கள் தங்கள் குழுக்களுக்குப் பொருத்தமற்ற நடத்தையைக் கண்டும் அவர்கள் தலையிட மற்றும் தலையிடுவதற்கான திறன்கள், அறிவு மற்றும் நம்பிக்கையை வழங்கும்போது ஆரோக்கியமான கலாச்சாரத்தை உருவாக்குவதிலும் துன்புறுத்தல் சம்பவங்களைக் குறைப்பதிலும் அதிகபட்ச தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.




சிவப்பு புள்ளியிலிருந்து பச்சை புள்ளிக்கு மாற விரும்பும் நிறுவனம் வன்முறைகளை நிறுத்த ஆர்வம் உள்ள பேச்சாளர்களை அழைத்து உரையாற்றச் சொல்லலாம்.

இந்த மாற்றத்தைப் பட்டாம்பூச்சி கோட்பாடு **(Butterfly Effect)** மூலம் அமைதியான வழியில், சக பணியாளர்களின் ஒத்துழைப்பையும் பெற்று நடைமுறைப்படுத்த முடியும்.

மீண்டும் ஒருமுறை பட்டாம்பூச்சி கோட்பாட்டை நினைவுறுத்திக்கொள்வோம். 1961இல் வானியல் நிபுணர் எட்வர்ட் லோரென்ஸ் முன்வைத்த பட்டாம்பூச்சி கோட்பாடு, “பிரேசிலில் ஒரு பட்டாம்பூச்சி தன் சிறகுகளை அசைத்தால், அது டெக்சாஸில் ஒரு சூறாவளியை உருவாக்கலாம்” என்கிற கருத்தை முன்வைக்கிறது. இந்தக் கோட்பாடு உாயழள வாநழசல-ன் ஒரு பகுதியாகும், சிக்கலான அமைப்புகளில் சிறிய மாற்றங்கள் பெரிய விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதைக் குறிக்கிறது.

பட்டாம்பூச்சி கோட்பாடு என்பது தொடக்க நிலையில் ஏற்படும் சிறிய மாற்றங்கள் பின்னர் பெரிய மற்றும் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தலாம் என்கிற கருத்தைக் குறிக்கிறது. நம் தனிப்பட்ட செயல்களின் சக்தியை குறைத்து மதிப்பிடக் கூடாது. ஒரு நபரின் முயற்சிகள் பெரிய திட்டத்தில் முக்கியமற்றதாகத் தோன்றலாம், ஆனால் வரலாற்றில் பெரிய மாற்றத்தைத் தூண்டிய தனிநபர்களின் எடுத்துக்காட்டுகள் நிறைய உள்ளன.

சிறிய மாற்றங்கள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்கிற கருத்து வணிக உலகில் பட்டாம்பூச்சி கோட்பாட்டைக் குறிக்கிறது. வணிகத்தில் பட்டாம்பூச்சி கோட்பாட்டின் பொருள் என்னவென்றால், வெளித்தோற்றத்தில் முக்கியமற்ற செயல்கள் அல்லது முடிவுகள் ஒரு நிறுவனத்தின் பாதையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

சிறிய கருணையான செயல்கள் மிகப் பெரிய மாற்றங்களுக்கு வித்திடலாம். காலை வணக்கத்தில் நேர்மையான புன்னகை கொடுப்பது மட்டும் ஒருவரின் நாள் முழுவதையும் மேம்படுத்தலாம். சகாக்களின் சிறிய சாதனைகளைக்கூடப் பாராட்டுவது அவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்துகிறது மற்றும் அவர்களை மேலும் சிறப்பாகச் செயல்பட ஊக்குவிக்கிறது. டீ பிரேக்கில் ஒருவரை உள்ளடக்குவது அவர்கள் குடும்பத்தின் ஒரு பகுதியாக உணர வைக்கிறது. பணியிடத்தில் ஒருவரின் கருத்தைக் கவனமாகக் கேட்பது அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் தருகிறது.

தகவல் பகிர்வு மற்றும் கற்றல் என்பது அறிவு சக்தியைப் பகிர்ந்துகொள்வதாகும். சிறிய செயல்கள் தொடக்க நிகழ்வாக இருக்கலாம், இது பரவலான, எதிர்பாராத நடத்தையை ஏற்படுத்துகிறது, அது முழு சமூகத்தையும் மாற்றுகிறது. ஓர் ஊழியரின் இரக்கமான செயல்கள் நோயாளியின் முழுக் குடும்ப வலைப்பின்னலையும் பாதிக்கலாம். ஒரு நபர் கற்றுக்கொண்ட ஒரு புதிய தொழில்நுட்பத்தைப் பகிர்ந்து கொள்வது முழு அணியின் திறனையும் மேம்படுத்தலாம்.

மனநலனுக்கு முன்னுரிமை கொடுப்பது நவீன பணியிடத்தின் அத்தியாவசிய அம்சம். பணிச்சுமை குறித்து அக்கறை காட்டுவது ஊழியர்களுக்கு அவர்கள் வெறும் இயந்திரங்கள் அல்ல, மாறாக மதிப்புள்ள மனிதர்கள் என்பதை உணர வைக்கிறது. மன அழுத்தத்தில் உள்ளவர்களுக்கு உதவி வழங்குவது அவர்களின் உற்பத்தித் திறனை மட்டுமல்லாமல், வாழ்க்கையின் தரத்தையும் மேம்படுத்துகிறது. வேலை-வாழ்க்கை சமநிலையை ஊக்குவிப்பது நீண்ட கால ஊழியர் தக்கவைப்பிற்கும், நிறுவனத்தின் நல்ல பெயருக்கும் வழிவகுக்கிறது.

பதிலளிப்பு மாதிரி **(Response Model)**

நேர்மறையான பணியிட கலாச்சாரத்தை உருவாக்க, வளர்ச்சியுள்ள நிறுவனங்கள் அதிக ஊழியர் ஈடுபாட்டை ஊக்குவிக்கலாம் மற்றும் தக்கவைப்பை அதிகரிக்கலாம்.

கலாச்சார விழிப்புணர்வு:

உங்கள் சமூக அல்லது கலாச்சார நிலையை ஒப்புக்கொள்ளுங்கள். உதாரணமாக, “நான் ஒரு ஆண் என்று எனக்குத் தெரியும், எனவே இங்கே என் அறிவு குறைவாக இருக்கலாம்” என்று ஒப்புக்கொள்வது வெளிப்படைத்தன்மையின் தொனியை அமைக்கலாம்.

நடைமுறை அணுகுமுறைகளாகக் கீழ்க்காணும் மாற்றங்களை உருவாக்கலாம்.

1. அறிதல் மற்றும் அங்கீகரித்தல்

தவறான நடத்தையை அடையாளம் காணக் கற்றுக்கொள்ளுங்கள்.

முன்முடிவுகள் மற்றும் சார்புகளை அங்கீகரிக்கவும்.

2. படிப்படியான தலையீடு

நேரடி மோதலைத் தவிர்த்து, சூழ்நிலையை மாற்றுங்கள்.

பாதிக்கப்பட்டவருக்குத் தனிப்பட்ட ஆதரவு வழங்குங்கள்.

3. ஆதரவு வலையமைப்பு

நம்பகமான சகாக்களுடன் கூட்டணி அமைக்கவும்

நேர்மறையான மாற்றத்திற்கான குழுக்களை உருவாக்கவும்

சமத்துவமான பணியிடத்திற்கான சில பச்சை மண்டல உத்திகளையும் சேர்க்கலாம். அவையாவன:

உள்ளடக்கிய கொள்கைகள்

பணியிட சமத்துவம் என்பது அவர்களின் தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் உங்கள் அனைத்து ஊழியர்களுக்கும் நியாயமான வாய்ப்புகளை வழங்கும் கருத்து. நிறுவனங்கள் தங்கள் குழுக்களுக்குப் பொருத்தமற்ற நடத்தையைக் கண்டும் அவர்கள் தலையிட மற்றும் தலையிடுவதற்கான திறன்கள், அறிவு மற்றும் நம்பிக்கையை வழங்கும்போது ஆரோக்கியமான கலாச்சாரத்தை உருவாக்குவதிலும் துன்புறுத்தல் சம்பவங்களைக் குறைப்பதிலும் அதிகபட்ச தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

நடைமுறை செயல்முறைகள்:

வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியம். சம்பள விவர அட்டவணைகளைப் பகிரங்கமாக அறிவிப்பதன் மூலம் ஊழியர்கள் தங்கள் ஊதியம் குறித்துத் தெளிவான புரிதலைப் பெறலாம். பதவி உயர்வு செயல்முறைகளைத் தெளிவாக விவரிப்பது அனைவருக்கும் சம வாய்ப்புகளை வழங்குகிறது மற்றும் நேர்மையான போட்டியை ஊக்குவிக்கிறது.

ஆதரவு அமைப்புகளை உருவாக்குவது சமத்துவமான பணியிடத்தின் அடிப்படை. ஊழியர் வள குழுக்கள் **(Employee Resource Groups)** பல்வேறு பின்னணியில் இருந்து வரும் பணியாளர்களுக்கு ஒரு பாதுகாப்பான இடத்தை வழங்குகின்றன. வழிகாட்டுதல் திட்டங்கள் **(Mentorship Programs)** இளம் தொழிலாளர்களுக்கும் அனுபவமிக்க பணியாளர்களுக்கும் இடையே பாலத்தை அமைக்கின்றன.

தொடர்ச்சியான கற்றல் என்பது ஒரு நாள் முடிவடையும் நிகழ்வு அல்ல. பன்முகத்தன்மை, சமத்துவம், உள்ளடக்குதல் மற்றும் சொந்த உணர்வு குறித்த பயிற்சி தொடர்ந்து வழங்கப்பட வேண்டும். உண்மையான மாற்றத்தை வளர்ப்பதற்கு, நிறுவனங்கள் இந்த உரையாடலை உயிருடன் வைத்து தொடர்ந்து உருவாகிக் கொண்டிருக்கும் பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

குறுகிய கால குறிகாட்டிகள் நம் முயற்சிகளின் உடனடி பலனைக் காட்டுகின்றன. நேர்மறையான உரையாடல்களின் அதிகரிப்பு பணியிடத்தில் ஒரு ஆரோக்கியமான மாற்றம் நடந்து கொண்டிருப்பதைக் குறிக்கிறது. புகார்களின் எண்ணிக்கை குறைவு துன்புறுத்தல் மற்றும் பாகுபாட்டு நிகழ்வுகள் குறைந்து வருவதைத் தெரிவிக்கிறது. பணியாளர் மன்னிப்பு அளவுகள் மேம்பாடு ஊழியர்கள் தங்கள் பணியிடத்தில் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் உணர்வதைக் காட்டுகிறது.

நீண்ட கால விளைவுகள் நம் முயற்சிகளின் நிலையான தாக்கத்தை அளவிடுகின்றன. நேர்மறையான பணிக்கூட கலாச்சாரம் ஊழியர்களின் ஒட்டுமொத்த வேலை திருப்தி மற்றும் வெற்றியில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. 94% நிர்வாக அதிகாரிகள் மற்றும் 88% ஊழியர்கள் நேர்மறையான பணியிடக் கலாச்சாரம் வணிக வெற்றியின் முக்கியப் பகுதி என்று நம்புகிறார்கள். இது வெறும் புள்ளிவிவரம் மட்டுமல்ல, மாறாக நம் அனைவரின் கூட்டு முயற்சியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் உண்மையாகும்.

நம்பிக்கை கட்டமைப்பு எந்தவொரு நீடித்த மாற்றத்தின் அடிப்படை. தனிப்பட்ட உதாரணம் காட்டுவது மிகவும் சக்திவாய்ந்த வழி. நீங்கள் மாற்றத்தைக் காண விரும்பும் நடத்தையை முதலில் காட்டுவதன் மூலம் மற்றவர்களுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக விளங்குகிறீர்கள். கதைகள் பகிர்தல் என்பது வெறும் தகவல் பரிமாற்றம் அல்ல, மாறாக நேர்மறையான மாற்றத்தின் சிறிய வெற்றிக் கதைகளைப் பகிர்வதன் மூலம் மற்றவர்களுக்கு உத்வேகம் அளிப்பது. கூட்டுப் பொறுப்பு என்கிற உணர்வை ஏற்படுத்துவது எல்லோரும் மாற்றத்தின் பங்காளிகள் என்கிற சிந்தனையை வளர்க்கிறது.

எதிர்ப்பைக் கையாள்வது மாற்றத்தின் ஓர் இயல்பான பகுதி. பொறுமையாகக் கேட்பது மற்றும் புரிந்துகொள்வது எதிர்ப்பின் வேர்களை அடையாளம் காண உதவுகிறது. சிறிய படிகளில் மாற்றம் கொண்டுவருவது பெரிய அதிர்ச்சிகளைத் தவிர்க்கிறது மற்றும் படிப்படியான ஏற்றுக்கொள்ளலை ஊக்குவிக்கிறது. வெற்றிகளைக் கொண்டாடுவது அடுத்த கட்ட மாற்றங்களுக்கான உத்வேகத்தையும் ஆற்றலையும் வழங்குகிறது.

நாம் நமது நடத்தையில் ஒரு சிறிய நேர்மறையான மாற்றத்தைச் செய்ய விவேகத்துடன் முடிவு செய்யும்போது, நாம் வாழ்க்கையின் குளத்தில் ஓர் அலையைச் சேர்க்கிறோம். நம் செயல்கள் மற்றவர்களை ஊக்குவிக்கின்றன, மேலும் ஒரு சங்கிலி எதிர்வினை ஏற்படுகிறது.

பணியிடங்களில் வன்முறை மற்றும் துன்புறுத்தலை ஒழிக்க ஒன்றாகக் குரல் கொடுப்பதுதான் ஒரே வழி. பார்வையாளர்களின் தலையீடு மற்றும் கூட்டு நடவடிக்கை இல்லாமல் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாது. பட்டாம்பூச்சி கோட்பாட்டின் படி, சிறிய மாற்றங்கள் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். நம் அனைவரின் சிறிய, நேர்மறையான செயல்கள் சேர்ந்து ஒரு சமத்துவமான, அமைதியான பணியிடத்தை உருவாக்க முடியும்.

ஒவ்வொரு பட்டாம்பூச்சியின் சிறகடிப்பும் ஒரு புயலை உருவாக்கலாம் என்றால், நம் ஒவ்வொரு நேர்மறையான செயலும் ஒரு சமத்துவமான உலகை உருவாக்க முடியும். இன்று தொடங்குங்கள் - ஒரு புன்னகையுடன், ஒரு கருணையான வார்த்தையுடன், ஓர் ஆதரவான செயலுடன். மாற்றம் சிறிய அடிகளிலிருந்து தொடங்குகிறது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2025 வெளியிடப்பெற்றது.